பெருநகர சென்னை மாநகராட்சி

செ.வெ.எண்.158 நாள் : 28.11.2016

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.**

------

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், முதன்மைச் செயலாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (தாட்கோ) திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டவர்களுக்கான மறுவாழ்வு மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று (28.11.2016) பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டவர்கள் 170 நபர்கள் எனக் கண்டறியப்பட்டு அவர்களின் மறுவாழ்விற்காக பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தாட்கோ இணைந்து அவர்களின் வங்கிக்கணக்கில் ஒருமுறை பணப்பயனாக ரூ.40,000/– வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணியில் ஈடுபட்டு தற்போது மறுவாழ்விற்காக கண்டறியப்பட்டவர்களுக்கு தமிழக அரசின் மூலம் சுயதொழில் பயிற்சியானது அதிகபட்சமாக 6 மாதங்கள் வரையில் ஊக்கத்தொகையுடன் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெற்றவர்கள் சுயதொழில் தொடங்கிட 30 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 லட்சம் வரையிலான மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் உதவி தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சுயதொழில் பயிற்சியாக பிட்டர், எலெக்ட்ரிசியன், அழகு கலை, கணினி பயிற்சி, கைபேசி பழுதுபார்க்கும் பயிற்சி, பிளாஸ்டிக் பொருட்கள் பயிற்சி, தையல் கலை போன்ற திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு மறுவாழ்விற்காக கண்டறியப்பட்ட பணியாளர்கள் தமிழக அரசால் வழங்கப்படும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி முறையாக சுயதொழில் செய்து தங்களது வாழ்வாதாரத்திற்காக நிரந்தரமான வருமானத்திற்கு நடவடிக்கை மேற்கொண்டு தங்களது பொருளாதார நிலையினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அனைத்து ஒருங்கிணைப்பு உதவிகளும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்படும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கருத்தரங்கில் துணை ஆணையாளர் (சுகாதாரம்) திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள், தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.ஆர்.சீனிவாசன், மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) திரு.ஆர்.ரங்கநாதன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தாட்கோ அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**